

# பெருமையும் தாழ்மையும்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** 1யோவான் 2:15–17; லூக் 18:9 14; 1யோவான் 1:9; எபி 11:24–26; லூக் 22:24–27; பிலி. 2:3–8.

**மனன வசனம்:** தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான். லூக்கா 14:11.

தங்கள்மீது தவறே இருக்காது என்று அதிக அகங்காரத்தோடு இருக்கிற நபர்களை நாம் எல்லாருமே பார்த்திருப்போம். அல்லது, அறிவுரைக்கோ நேர்மறையான விமர்சனத்திற்கோ செவிசாய்க்க விரும்பாமல், தாங்களே அதிகாரம் செலுத்தவேண்டும் என்று விரும்புகிறவர்களையும் பார்த்திருக்கலாம். வேறு சிலர், எப்போதும் பிரச்சினைகளை உருவாக்கிக் கொண்டும், திட்டமிட்டு மற்றவர்களைக் கீழே தள்ளிக்கொண்டும் இருப்பார்கள். உடனே இவ்வாறெல் லாம் நீங்கள் கருதியிருக்கிற சில நபர்கள் உங்கள் நினைவுக்கு வரலாம், ஆனால் உண்மையான கேள்வி என்ன தெரியுமா? நீங்கள் எப்படி? ‘என் வாழ்க்கையில் பெருமையே கிடையாது, மற்றவர்கள்தான் அப்படி’ என்று நினைத்தால், நம்மை நாமே வஞ்சிக்கிறோம்.

நம் அனைவருக்குமே பெருமையுடன் போராட்டம் இருந்திருக்கும். நாம் மற்றவர்களைவிட ஏதோ ஒரு விதத்தில் சிறந்தவர்கள் என்று நம்புவதால், நம் மைச் சுற்றியுள்ளவர்களைவிட அழகாகவோ, புத்திசாலித்தனமாகவோ, மேலா னவர்களாகவோ காட்டிக்கொள்ள முயன்றிருப்போம். இது தேவையில்லை. ‘‘தேவன் நம்மைச் சிருஷ்டித்தார், நமக்காகவே கிறிஸ்து மரித்தார்’’ என்பதால், நமக்கு மதிப்பு உண்டு என்பதை நாம் அறிந்திருக்கவேண்டும்.

பெருமையானது தேவனோடும் மற்றவர்களோடும் நமக்குள்ள உறவில் எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்? மற்றவர்களுக்கு முன்பாகவும், தேவனுக்கு முன்பாகவும் நாம் தாழ்மையுடன் இருக்கவேண்டியதுபற்றி வேதா கமம் என்ன போதிக்கிறது என்பதை இந்த வாரம் ஆராய்வோம்.

*2026, ஏப்ரல் 18 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# அகந்தையின் பிடிவாதக் குணம்

அகந்தை என்றதும், ஒரு கர்வமுள்ள அரசியல்வாதியோ, ஒரு பணக் காரரோ, பிரபலமான நபரோ, தோகை விரித்தாடும் மயிலோ உங்கள் நினை வுக்கு வரலாம்.

பெருமை என்பது மற்றவர்களைவிட உங்களை மேலானவர் என்று கருது கிற ஒரு உணர்வாகும். உண்மையில், பெருமை என்பது ஓர் உணர்வு; அதை நாம் ஒருபோதும் நம்பவோ, சார்ந்திருக்கவோ கூடாது. பெருமை என்பது முதலில் லூசிபரிடம் தொடங்கியது; அவன் தேவனுக்கு மிகவும் அருகில் சேவைசெய்து வந்த கேரூப். அவன் இதயத்திற்குள் சுயநல எண்ணங்கள் எப்போது, எப்படி நுழைந்தன என்று நமக்குத் தெரியாது; ஆனால் அந்த எண்ணங்களே இன்று மா பெரும் போராட்டம் என்று நாம் அழைக்கக்கூடிய நிலைக்கு இந்தப் பிரபஞ்சத் தைத் தள்ளின. சாத்தான் என்பவன் தேவனுக்கு முற்றிலும் எதிரானவன் என் பதை இதன்மூலம் காணமுடிகிறது. ஏசா 14:12-14; பிலி 2:5-11 ஆகியவற்றை ஒப்பிடுக. இதன் விளைவாக, ஆதாம்-ஏவாளின் மனதில் சாத்தான் சந்தேகத்தை விதைத்தான். தேவனைவிட தங்களை அதிகம் நேசிக்கவும் நம்பவும் அவர் களைத் தூண்டினான், அன்றிலிருந்து, நம் உலகம் பாவத்தின் விளைவுகளுக்கு எதிராகப் போராடி வருகிறது.

**பெருமைபற்றியும், உலகத்தை நேசிப்பதுபற்றியும் 1யோவான் 2:15-17 வலி யுறுத்துகிற மூன்று முக்கியக் கருத்துகள் என்ன?**

பெருமை என்பது ஒருபோதும் நேர்மறையானதாக இருக்கமுடியாதா? ஒருவேளை பெருமைபற்றி பொதுவாக நம்மிடமுள்ள கருத்தின்படி அது நேர் மறையானதாக இருக்கமுடியாது, ஆனாலும், ஒருவருடைய சாதனைகளைப் பற்றிப் பேசும்போது அல்லது யாரோ ஒருவர் செய்த ஒரு காரியத்தை ஆழமாகப் பாராட்டும்போது, இந்தச் சொல்லை நேர்மறையான அர்த்தத்தில் பயன்படுத்து கிறோம். உதாரணமாக: *'உன்னைப் பார்த்து நான் மிகவும் பெருமைப்படுகிறேன்!'* என்பதைச் சொல்லலாம். வேதவசனங்களின்படி, சரியான வகை சுயஅன்பும் இருக்கிறது; மாற்கு 12:31-இல், நாம் நம்மை நேசிப்பதுபோலவே மற்றவர்களை யும் நேசிக்கவேண்டும் என்று இயேசு கட்டளையிடுவதில், அதைக் காணலாம். ஆனால், இந்த அன்பு எப்போதும் சுயநலமற்ற அன்பாகவே இருக்கிறது. வாழ்க் கையில் தேவ பிரசன்னமும், குறிப்பிட்ட நோக்கமும் காணப்பட்டால், பெருமை வராது. 1தீமோ 3:1. தேவன் நம் வாழ்க்கையில் செய்துவருகிற காரியங்களுக்காக அவருக்கு மகிமைசெலுத்தத் தவறும்போதுதான் பெருமை வருகிறது.

நம்மிடம் உள்ள உடைமைகளோ, திறமைகளோ, சாதனைகளோ நம்மு டைய மதிப்பைத் தீர்மானிப்பதில்லை. மாறாக, நம்முடைய மதிப்பு எப்போதும் தேவனிடமிருந்தே வரவேண்டும்; ஏனெனில் நம்மிடம் உள்ள அனைத்தும், ஏன், நம்மைப் பெருமை கொள்ளத் தூண்டும் விஷயங்கள்கூட அவரிடமிருந்தே வருகின்றன. இதை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது.

---

**உங்களை நீங்களே கேளுங்கள்: உண்மையில் என்னிடம் எவ்வளவு தூரம் பெருமை காணப் படுகிறது? அந்தப் பெருமை தேவனோடும் மற்றவர்களோடுமுள்ள உறவை எவ்வாறு பாதிக் கிறது?**

# உங்களை அறிந்துகொள்ளுங்கள்

இரண்டு மனிதர்கள் ஜெபிப்பதற்காக ஆலயத்திற்குச் செல்கிறார்கள். ஒருவர் சபையில் மதிக்கப்படுகிற மூப்பர்; ஆராதனை துவங்கும் முன்பே எல்லாரும் பார்க்கும் வகையில் முன்வரிசையில் வந்து நிற்கிறார். அவர் சத்தமாக ஜெபிக்கும்போது, தனது நற்செயல்களாக, தான் கருதின விஷயங்களுக்காக நன்றிசொல்கிறார். மற்றொரு நபரோ, சமூகத்தால் ஒதுக்கப்பட்டவர், ஆலயத்தின் கடைசி வரிசையில் நிற்கிறார். தன் பாவங்களின் சுமையால் அவர் கண்களில் கண்ணீர் கட்டுகிறது. ஆலயத்தின் பின் மூலையில் முழங்காலிட்டு, மிகுந்த ஏக்கத்தோடு, 'ஆண்டவரே, பாவியாகிய என் மீது கிருபையாய் இரும்!' என்று கெஞ்சுகிறார்.

**இந்த இருவரைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்? இயேசு என்ன நினைத்தார்? இங்கே நம் அனைவருக்கும் உள்ள முக்கியப் பாடம் என்ன? லூக்கா 18:9-14.**

நம்மை நாமே உயர்த்திக்கொள்வது நமக்கு மிகவும் எளிது. சில நேரங்களில், நம் சாதனைகளையும், நாம் எவ்வளவு நல்லவர்கள் என்பதையும் மற்றவர்களுக்குத் தெரியப்படுத்துவது நமக்குப் பழகிப்போன ஒரு இயல்பாகவே மாறிவிடுகிறது. ஆனால், பரலோகத்தில் நமக்கிருக்கும் மதிப்பையோ, நற்பெயரையோ எந்த வகையிலும் இவை மாற்றிவிடாது. உண்மையில் இது, நாம் நினைப்பதற்குஎதிரானதாகஇருக்கலாம்; ஏனென்றால்'தன்னைஉயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்' லூக் 18:14. ஒரு விருந்தில், நாம் தாழ்ந்த இடத்தில் உட்காரவேண்டும் என்றும், விருந்தளிப்பவர் விரும்பினால், அவர் நம்மை முதன்மையான இடத்தில் உட்காரவைக்கட்டும் என்றும் இயேசுவும்கூட சொல்கிறார். லூக்கா 14:8-10. இயேசு போதிக்கிற இந்தத் தலைகீழ் அரசாங்கம் நாம் எதிர்பார்ப்பதற்கு முற்றிலும் நேர்மாறானது. தன்னைப் பாவி என்று அறிந்திருப்பவனை மட்டுமே கிறிஸ்துவால் இரட்சிக்கமுடியும்"[1]

முதலாவதாக, நம்முடைய பாவநிலையின் உண்மையான தன்மையையும், கிறிஸ்து நமக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுவதையும் நாம் உணரும்போதுதான், 'நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்' என்று மிகுந்த நம்பிக்கையோடு அவரிடம் வரமுடியும். 1யோவான் 1:9.

நாம் எவ்வளவுக்கு நெருக்கமாக கிறிஸ்துவிடம் இழுக்கப்படுகிறோமோ, அவ்வளவுக்கு நம் பாவத்தன்மையையும் தகுதியின்மையையும் உணருவோம். சுயம்பற்றி மெய்யான அறிவை ஒரே ஒரு வழியில்மட்டுமே பெறமுடியும். நாம் கிறிஸ்துவைப் பார்க்கவேண்டும். அவரைப்பற்றிய அறிவு இல்லாததுதான், மனிதர்கள் தங்கள் சொந்த நீதியில் மேன்மைபாராட்ட வழிவகுக்கிறது.

எனவே, பெருமைபற்றி தேவன் என்ன நினைக்கிறார். 'பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்' 1பேதுரு 5:5. இதற்குமேல் தெளிவாகச் சொல்ல ஒன்றுமில்லை.

---

**உங்கள் வாழ்க்கையில் கடைசியாக எப்போது தேவகிருபையை அனுபவித்தீர்கள்? இந்தக் கிருபையை நாம் தினமும் அனுபவிக்கவேண்டும். மற்றவர்களுக்கும் கிருபை காட்டவேண்டும். ஏற்ற நேரத்தில் தேவன்மட்டுமே மகிமைப்படும்படி, அவர் தம் மகத்துவக் கரத்தின்கீழ் உங்களைத் தாழ்மைப்படுத்த வேண்டும். இதற்காக ஜெபியுங்கள்.**

# மோசே, தாழ்மையுள்ள தாசன்

எகிப்திய அரண்மனையின் பிரமாண்ட மண்டபங்களில் செல்வமும் சிற்றின்பங்களும் சுகபோகங்களும் நிறைந்திருந்தன. 'மோசே எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களிலும் கற்பிக்கப்பட்டு, வாக்கிலும் செய்கையிலும் வல்லவன் ஆனான்.' அப் 7:22. அதிகாரம், செல்வம், புகழ்நிறைந்த வாழ்க்கை தன் கைக்கெட்டும் தூரத்தில் இருந்தும், மோசே முற்றிலும் மாறுபட்ட ஒரு வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்தார். அப் 7:22. 'வரலாற்றாசிரியர், கவிஞர், தத்துவஞானி, ராணுவத் தளபதி, சட்டமேதை என்று தனக்கு நிகர் எவருமில்லாத ஒருவராகத் திகழ்ந்தார். உலகத்தின் மேன்மைகள் அவருக்குமுன் இருந்தும், செல்வமும் புகழும் தரக்கூடிய கவர்ச்சிகரமான வாய்ப்புகளை மறுக்கிற மன உறுதி அவருக்கு இருந்தது; 'அநித்தியமான பாவசந்தோஷங்களை அனுபவிப்பதைப்பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்துகொண்டார்.'

**மோசே வித்தியாசமான பாதையைத் தெரிந்துகொண்டு, தன்னைத் தாழ்த்தினதற்கான காரணம்பற்றி எபி 11:24-26 என்ன சொல்கிறது?**

மோசே எவ்வளவு அதிகாரமிக்க மனிதராக இருந்தார்? அவர் எங்கிருந்து வந்தவர்? இவற்றைக் கருத்தில் கொள்ளும்போது, பிற்காலத்தில் அவரிடம் காணப்பட்ட தாழ்மை வியப்பளிக்கிறது. ஆனாலும், அவசரப்பட்டுச் செய்த ஒரு பாவச் செயலினால் (யாத் 2:12), தனது தன்னம்பிக்கையையும் சுயசார்பையும் இழந்தார். மலைகள் வகுப்பறையாயின. பெருமை நீக்கப்பட்டது, அங்கு, ஒரு தேசத்தை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்கு வழிநடத்தத் தேவையானவற்றை 40 ஆண்டுகளாக தேவன் அவருக்குக் கற்றுக்கொடுத்தார். மோசே நித்திய வாழ்கையைப்பற்றிச் சிந்தித்தபோது, அதிகாரத்தோடும் செல்வச்செழிப்போடும் எகிப்தில் வாழ்ந்திருக்கக்கூடிய அந்த வாழ்க்கை முக்கியமற்றதாகத் தெரிந்தது. மோசேயை தேவன் விசேஷித்த நோக்கத்திற்காக அழைத்தார், மோசே கீழ்ப்படிந்தார்.

இந்தக் கருத்தின் அடிப்படையில் எண் 12:3 ஒரு முக்கிய விஷயத்தைச் சொல்கிறது. 'மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தான்'. வேதாகமத்தின் மாபெரும் கோத்திரப்பிதாக்களில் ஒருவரான மோசே, தனது தாழ்மைக்கும் சாந்த குணத்திற்கும் பெயர்பெற்றவர். எரிகிற செடி, எகிப்தின் வாதைகள், செங்கடலைக் கடந்துவருதல், வானத்திலிருந்து மன்னா பொழிதல், தேவனிடம் நேரடியாகப் பேசுதல், பத்துக்கற்பனைகளைப் பெறுதல், கற்பாறையை அடித்தபிறகு தேவன் பேசுதல் போன்று அவரது வாழ்க்கையின் இந்த முக்கிய நிகழ்வுகளில் ஒருவேளை பெருமை புகுந்திருந்தால், அவருடைய வாழ்க்கையும் தலைமையும் எவ்வளவு வித்தியாசமாக மாறியிருக்குமென யோசியுங்கள்.

---

**உங்கள் வாழ்க்கையைப்பற்றி யாராவது விவரிக்க நேர்ந்தால், 'தாழ்மையுள்ளவர், சாந்தகுணமுள்ளவர்' என்று விவரிக்கமுடியுமா? ஏன் விவரிப்பார்கள்? அல்லது ஏன் விவரிக்கமாட்டார்கள்? நம் சுயமுயற்சியால் நம்மால் தாழ்மையாக இருக்கமுடியாது. பாவம் நம் வாழ்வின் ஒரு பகுதி; அதனால்தான் நமக்கு இயேசுவின் உதவி அதிகம் தேவை. 'எனக்கு இயேசுவே போதும்' என்ற பாடலின் வரிகளைக் கேளுங்கள்; அந்த வரிகளை மோசேயின் வாழ்க்கையோடும் உங்கள் வாழ்க்கையோடும் ஒப்பிட்டுச் சிந்தித்துப் பாருங்கள்.**

# மிகப்பெரிய குற்றம்

நீங்கள் இயேசுவின் 12 சீடர்களில் ஒருவர் என்று வைத்துக் கொள்வோம். அவரோடு பயணிக்கிறீர்கள்; அவருடன் சாப்பிடுகிறீர்கள்; அவருக்கு அருகில் தூங்குகிறீர்கள்; நீங்கள் உட்பட ஏராளமானவர்களின் வாழ்க்கையை அவர் மாற்றும்போது, அவரிடமிருந்து கற்றுக்கொள்கிறீர்கள். மக்கள் அவருக்குப் பின்னால் படையெனத் திரண்டுசெல்கிறார்கள், அவருக்கு நெருக்கமான 12 சீடர்களில் ஒருவராக இயேசு உங்களைத் தேர்ந்தெடுத்திருப்பது எவ்வளவு சிறப்பு என்று நினைக்கிறீர்கள். பிறகு, 'இந்தச் சீடர்களில் பெரியவர் யார்?' என்கிற நினைப்பு உங்களுக்கு வருகிறது.

**எவன் பெரியவன் என்பதில் சீடர்களிடையே உருவான வாதத்திற்கு இயேசு சொன்ன பதிலை லூக் 22:24-27இல் வாசியுங்கள். இயேசு வலியுறுத்தின செய்தியின் மையக் கருத்தை இந்த வசனங்களில் வலியுறுத்திக் காட்டுகிற அறிக்கை எது?**

இயேசுவோடு இவ்வளவு காலம் நெருக்கமாக இருந்தபிறகு, இப்படிப்பட்ட ஒரு விவாதம் அவர்கள் மனதில் எழுந்திருக்கவே கூடாது என்றுதான் எவரும் நினைத்திருப்பார்கள். ஆனால், அப்படி நடக்கவில்லை.

அவர்கள் தங்கள் அழைப்பில் திருப்தியடைவதற்குப்பதிலாக, அவர்கள் இருதயங்களில் பெருமை எழுந்ததால், ஒருவருக்கு ஒருவர் யார் பெரியவர் என்று யோசித்தார்கள். இத்தகைய எண்ணங்கள் நம் சிந்தைகளை ஆக்கிரமிக்க அனுமதிப்பது எளிது. ஆனால், பெருமையும் சுயநிறைவுமுள்ள மனப்பான்மையைப் போல தேவன் அதிகமாக வெறுப்பது எதுவுமில்லை; மனித ஆத்துமாவிற்கு அதிக ஆபத்தானதும் எதுவுமில்லை. எல்லா பாவங்களிலும் இதுவே நம்பிக்கையற்றதும் குணமாக்கமுடியாததாகவும் இருக்கிறது.

இதை நாம் தீவிரமாக எடுத்துக்கொள்ளவேண்டும். வேறு எதையும்விட நம் பெருமைதான் தேவனை அதிகமாகப் புண்படுத்துகிறது, மேலும், இது நம்மால் எளிதில் வெல்லமுடியாத ஒரு குணமாக இருக்கிறது, ஏனெனில் அது பெருமை என்பதையே பெரும்பாலும் நாம் உணராமல் இருக்கிறோம். சுயநிறைவு மனப்பான்மை இருக்கும்போது, அங்கே ராஜாபோல பெருமை ஆளுகை செய்வதால், நம்மைநாமே மதிப்பீடு செய்ய நாம் தீர்மானிப்பதில்லை. நாம் நின்று, நம்மையே பரிசோதித்து, நம்முடைய மெய்யான நிலையைக் காண நம் கண்களைத் திறக்கும்படி தேவனிடம் கேட்கவேண்டும்; ஏனென்றால், இன்று நாம் தேவனோடு நெருக்கமான உறவு கொள்வதைத் தடுக்கிற மிகமுக்கியமான காரணியாக பெருமை இருக்கலாம்.

---

**உங்களுடைய ஆத்துமாவிலிருந்து பெருமையையும் சுயநலத்தையும் அகற்றுகிற வேலையை தேவன் மட்டுமே செய்யமுடியும் என்பதை உணர்ந்தால், இப்போதே நீங்கள் இந்த ஜெபத்தை ஏறெடுக்க நேரம் ஒதுக்குங்கள்: 'ஆண்டவரே, என் இருதயத்தை எடுத்துக்கொள்ளும்; ஏனென்றால் என்னால் அதைக் கொடுக்கமுடியாது. அது உம்முடைய சொத்து. அதை என்னால் உமக்காகச் சுத்தமாக வைக்க முடியாததால், நீர் அதைச் சுத்தமாக்கும். எனது பலவீனமான, கிறிஸ்துவைப் போலல்லாத சுயத்திலிருந்தும், எனது விருப்பத்திற்கு மாறாகவேனும் என்னை இரட்சியும். என்னை உருவாக்கும், என்னை வடிவமையும், உம்முடைய அன்பின் நீரோட்டம் என் ஆத்துமாவிற்குள் அதிகமாகப் பாயக்கூடிய ஒரு தூய்மையான, பரிசுத்தமான சூழ்நிலைக்கு என்னை உயர்த்தும்'**

# அவரை நோக்கிப் பாருங்கள்

**கிறிஸ்துவைப் பின்பற்றுகிற அனைவருக்கும் லூக் 22:27இல் உள்ள முக்கியச் செய்தி என்ன?**

மற்றவர்களைவிட, தாங்களே சிறந்தவர்கள் என்றும், தங்களுக்கு உயர்வான பதவிவேண்டும் என்றும் சீஷர்கள் ஆசைப்பட்டதற்கு முற்றிலும் மாறாக, தாழ்மைக்கு மிகச்சிறந்த உதாரணமாக இயேசுவை நாம் இங்கே காண்கிறோம். 'அப்படியிருந்தும், நான் உங்கள் நடுவிலே பணிவிடைக்காரனைப்போல் இருக்கிறேன்' என்று இயேசு சொன்னார். லூக் 22:27. இயேசு, தம்மைச் சுற்றிலும் தேவையோடு இருந்தவர்களுக்கு ஒவ்வொரு நாளும் உதவினார்; ஏனெனில் மக்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போல இருப்பதைக் கண்டு, அவர்கள்மேல் மிகவும் மனதுருகினார். எதையும்விட தாமே மனுக்குலத்திற்கு மிகவும் தேவை என்பதை அறிந்திருந்தார்; ஆனால் சிலரே இந்த எளிய உண்மையை உணர்ந்திருந்தார்கள். மனிதர்கள் தமது கிருபையின் செயலைப் புரிந்துகொண்டு, தம்மோடு உறவை ஏற்படுத்தவேண்டும் என்கிற ஆசையில், அவர்களுக்காக மரிப்பதற்கு இயேசு பரலோகத்தையே துறந்து வந்தார்.

**சிலுவையின் வெளிச்சத்தில் நாம் வாழவேண்டிய விதம்பற்றி பிலி 2:3-8 வசனங்கள் என்ன சொல்கின்றன?**

இயேசுவே எல்லாவற்றையும் செய்தார். அவரே எல்லாவற்றையும் சுமந்தார். நாம் நேரமெடுத்து தியானித்து, அவரை உண்மையாக, உள்ளபடியே ஆராய்ந்தால், நம்முடைய அசுத்தமும் அழுக்கும் புரியும்; நம் வாழ்க்கைக்கு இன்று அவர் அவசியம் தேவைப்படுவது நமக்குப் புலப்படாமல் இருக்க வாய்ப்பே இல்லை.

நாம் அவரை நோக்கிப் பார்க்கும்போது, மற்றவை அனைத்தும் (குறிப்பாக நம்மைப் பற்றிய எண்ணமும், நாம் பெருமையாகக் கருதும் நமது சிறப்புகளும்) முற்றிலும் முக்கியமற்றதாக மங்கிப்போய்விடுகின்றன. இயேசு யார் என்பதும், அவர் என்ன செய்திருக்கிறார் என்பதும், அவர் தம் சிருஷ்டிப்பை எவ்வளவுக்கு நேசிக்கிறார் என்பதும் மிகமுக்கியமானதாக மாறுகிறது.

இயேசு. எவ்வளவு அருமையான, வல்லமையுள்ள நாமம்! அவரே தாழ்மையின் இலக்கணம். நாம் திறந்த இதயத்தோடு அவரிடம் கற்றுக் கொள்ளும்போது, அவர் நமக்காகச் செய்திருப்பதைப் புரிந்துகொள்ளும்போது, அவருடைய ஜீவனுள்ள வார்த்தைகள் நமது மனதிற்குள் ஊடுருவ நாம் அனுமதிக்கும்போது, உண்மையில் நாம் எவ்வளவு பெருமை உள்ளவர்களாக இருக்கிறோம் என்பதை உணருகிறோம். அவரோடு வாழ்ந்து, அவரிடமே கற்றுக்கொண்ட அவரது சொந்தச் சீடர்களே பெருமையோடு போராடினார்கள் என்றால், நாம் மட்டும் அவர்களுக்குக் குறைந்தவர்களாக முடியாது. நாம் தாழ்மையுள்ளவர்களாக இருக்கும்போதுமட்டுமே இயேசுவுடனான நமது உறவில் வளரமுடியும்.

---

**இப்போதே அவரோடு கூடுதலாக நேரம் செலவிடுங்கள். உங்கள் வேதாகமம், ஒரு பேனா, ஒரு குறிப்பேடு அல்லது ஒரு காகிதத்தை எடுத்துக்கொண்டு, அமைதியான ஓரிடத்திற்குச் செல்லுங்கள். தேவன் உங்கள் இருதயத்தைப் பண்படுத்தி, உங்களுடன் பேசுவதற்கு அவரை அழையுங்கள். சங்கீதம் 138-ஐ வார்த்தைக்கு வார்த்தை அப்படியே எழுதுங்கள். நீங்கள் எழுதும்போது, எந்த வார்த்தைகள் உங்கள் மனதைக் கவர்கின்றன?**

# மேலும் படிக்க:

'நாம் எவ்வளவுக்கு அதிகமாக இயேசுவிடம் நெருங்கி வருகின்றோமோ, அவருடைய சுபாவத்தின் தூய்மையை எவ்வளவு தெளிவாகக் காண்கின்றோமோ, அவ்வளவு தெளிவாகப் பாவத்தின் கொடூரத்தையும் காண்போம்; அப்போது நம்மைநாமே உயர்த்துகிற எண்ணம் நமக்குள் குறையும். பரலோகம் யாரைப் பரிசுத்தவான்கள் என்று அங்கீ கரிக்கின்றதோ, அவர்கள் தங்களது சொந்த நற்குணங்களை ஒருபோதும் விளம்பரப்படுத்த மாட்டார்கள்.'

'மேன்மைக்கு முன்னானது தாழ்மை. மனிதர்களுக்குமுன்பாக ஒரு உயர்ந்த இடத்தைப் பெறுவதற்கு, யோவான் ஸ்நானனைப்போல தேவனுக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்திக்கொள்கின்ற ஊழியக்காரனையே பரலோகம் தெரிந்தெடுக்கிறது. ஒரு சிறுபிள் ளையைப் போன்ற சுபாவமுடைய சீடனே தேவனுடைய பணியில் மிகவும் திறமையானவனாக இருக்கிறான். தன்னைத்தானே உயர்த்தாமல், ஆத்துமாக்களை இரட்சிப்பதையே நோக்கமா கக் கொண்டிருப்பவனுடன்தான் பரலோகத் தூதர்கள் இணைந்து செயல்பட முடியும்... தேவனுடைய மகத்தான திட்டத்தின் வெற்றிக்குத் தாங்கள் மிகவும் அவசியமானவர்கள் என்று எண்ணி, மனிதர்கள் தங்களைத்தாங்களே உயர்த்திக் கொள்ளும்போது, கர்த்தர் அவர்களை ஒதுக்கிவைக்கிறார்... இயேசுவின் சீடர்களுக்கு அவருடைய ராஜ்யத்தின் தன்மையைப்பற்றிய அறிவைப் பெறுவதுமட்டும் போதுமானதாக இருக்கவில்லை. அந்த ராஜ்யத்தின் கொள்கைகளுக்கு தங்களை இணக்கமாக்குகிற ஓர் 'இருதய மாற்றம்' அவர்களுக்குத் தேவையாய் இருந்தது. ஒரு சிறு பிள்ளையிடம் உள்ள கள்ளங்கபடற்ற தன்மை, தன்னலம் மறத்தல், முழுமையாக நம்பும் அன்பு ஆகிய பண்புகளையே பரலோகம் மதிக்கிறது. இவைதான் மெய்யான மேன்மையின் குணாதிசயங்களாகும்.... உண்மையாகவே மனஸ்தாபப்படுகிற ஆத்துமா தேவனுடைய பார்வையில் மிகவும் விலையேறப்பெற்றது. அவர் மனிதர்களுடைய அந்தஸ்தையோ, செல்வத்தையோ அல்லது கூரிய அறிவுத்திறனையோ பார்த்து தமது முத்திரையை அவர்கள் மேல் பதிப்பதில்லை; மாறாக, அவர்கள் கிறிஸ்துவுடன் வைத்துள்ள ஐக்கியத்தை வைத்தே தமது முத்திரையைப் பதிக்கிறார்'.

---

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *பெருமை, தாழ்மைபற்றி பின்வரும் வசனங்கள் வெளிப்படுத்துகிற உட்கருத்துக்கள் என்ன? மத் 23:12; சங் 25:9; 149:4; யாக் 4:6,10.*

2. *உண்மையாகச் சொல்லுங்கள்: நீங்கள் கடைசியாக எப்போது, 'உங்கள் சிறப்பு களை விளம்பரப்படுத்தினீர்கள்'? உங்களுடைய இந்தப் பெருமை, தேவனோடுள்ள உங்கள் உறவையும், யாரிடம் நீங்கள் உங்களை உயர்த்திப் பேசினீர்களோ அவர் களோடுமுள்ள உங்கள் உறவையும் எப்படிப் பாதித்தது?*

3. *தேவனுடன் உங்கள் அனுபவத்தைப் பெலப்படுத்த தேவனுக்குமுன் உங்களைத் தாழ்த்த நீங்கள் என்ன மாற்றத்தைச் செய்ய வேண்டியதிருக்கலாம்?*

**பாடச்சுருக்கம்:** தேவனோடுள்ள உறவில் வளர்ச்சியைத் தடைசெய்கிற மிகப்பெரிய தடைக்கற்களில் ஒன்று பெருமை. நாம் நம் சுயநிறைவு மனப்பான்மையால், இந்த உறவின் அவசியத்தை உணராவிட்டால், இந்த உறவைத் தேடிச்செல்லமாட்டோம். மாறாக, இயேசுதாம் பூமியிலேயே மிகவும் தாழ்மையான மனிதராக இருந்தார்; தேவனுடன் எவ்வாறு ஒரு நெருக்கமான உறவை வைத்திருக்க முடியும் என்பதற்குப் பரிபூரண உதாரணமாக இருக்கிறார்.

# ‘நாங்கள் உதவ விரும்புகிறோம்‘

80,000 மக்கள் தொகை கொண்ட பிரேசிலிய நகரமான பெலோ ஜார்டினில், அயோலாண்டா என்பவரின் வீட்டை நோக்கி மூன்று சிறுமிகளும் அவர்களது அம்மாவும் நடந்து வந்தார்கள். அவர்கள் வருவதை அயோலாண்டா பார்த்தார். உணவு கேட்டு வந்த ஒருவருக்கு அரிசி மற்றும் பருப்பு கொடுத்துவிட்டு அவர் வாசலில் நின்று கொண்டிருந்தார். அவரது வீடு ஒரு பரபரப்பான வீதியில் இருந்ததால், மக்கள் தொடர்ந்து உதவி கேட்டு அவர் கதவைத் தட்டுவது வழக்கம். எனவே வீட்டை நோக்கி வந்துகொண்டிருந்தவர்களுக்கும் ஏதேனும் உதவி தேவைப்படும் என்று நினைத்தார், எனவே அந்த நபர் சென்ற பிறகும் அங்கேயே நின்றுகொண்டிருந்தார். அந்தத் தாயும் சிறுமிகளும் வாசலருகே வந்ததும், அயோலாண்டா அந்தச் சிறுமிகளின் கால்களைப் பார்த்தார்.

‘ஏன் உங்கள் பிள்ளைகள் வெறும் காலுடன் இருக்கிறார்கள்?‘ என்று கேட்டார்.

மூத்தவளான தனது எட்டு வயது மகளின் செருப்பு பிய்ந்துவிட்டதாக அந்தத் தாய் சொன்னார். அதனால், மூத்தவள் வெட்கப்படக்கூடாது என்பதற்காக நான்கு மற்றும் ஆறு வயதுடைய தனது மற்ற இரு மகள்களையும் அவர்களது செருப்புகளைக் கழற்றுமாறு சொல்லி விட்டார். “நான் ஒரு ஜோடி செருப்புகளையும் கொஞ்சம் உணவையும் எடுத்து வருகிறேன்” என்று அயோலாண்டா கூறினார்.

அயோலாண்டா வீட்டிற்குள் சென்று, அந்த எட்டு வயது சிறுமிக்காக ஒரு ஜோடி செருப்புகளையும், பிஸ்கட்கள், குக்கீஸ்கள் மற்றும் குளிர்ந்த தண்ணீரையும் எடுத்துக்கொண்டு சிறிது நேரத்தில் திரும்பி வந்தார். அந்தச் சிறுமிகள் மகிழ்ச்சியில் முகம் மலர்ந்தார்கள். அவர்களில் ஒருத்தி, “நாங்கள் உங்களை ’பாட்டி’ என்று அழைக்கலாமா?” என்று கேட்டாள்.

அயோலாண்டாவின் அன்பைக் கண்டு அந்தத் தாய் ஆச்சரியப்பட்டார். “நீங்கள் ஏன் இதைச் செய்கிறீர்கள்?” என்று அவர் கேட்டார். “நான் செவந்த்–டே அட்வென்டிஸ்ட் திருச்சபையைச் சேர்ந்த ஒரு கிறிஸ்தவர், நாங்கள் மக்களுக்கு உதவ விரும்புகிறோம். நான் குழந்தைகளுக்காக உடைகள் தைக்கிறேன், திருச்சபை உறுப்பினர்கள் எனக்கு நிறைய நன்கொடைகளைத் தருகிறார்கள். அதனால், என்னிடம் நிறைய செருப்புகளும் உடைகளும் உள்ளன” என்று அயோலாண்டா கூறினார்.

“நானும் இந்தத் திருச்சபையில் சேர விரும்புகிறேன், உங்களுடன் சேர்ந்து வேதாகமத்தைப் படிக்க விரும்புகிறேன்” என்று அந்தத் தாய் கூறினார். ஒரு வருடம் கழித்து, அந்தத் தாய் ஞானஸ்நானம் பெற்று அட்வென்டிஸ்ட் திருச்சபையில் இணைந்தார்.

86 வயதான கொள்ளுப்பாட்டியான அயோலாண்டா சேவியர், ‘நீங்கள் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள்’ என்கிற இயேசுவின் கட்டளைக்குக்கீழ்ப்படிவதைவிட முக்கியமானதுவேறொன்றுமில்லை என்று நம்புகிறார். மத்தேயு 28:19,20.



“ஊழியப்பணி மிகவும் முக்கியமானது, நாமனைவருமே ஊழியர்களாக இருக்கவே தேவன் நம்மை உண்டாக்கியிருக்கிறார்” என்று கூறினார்.